மதுரையில் வழங்கப்பட்ட குடும்பக் கார்டுகள்

*681 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரிலும், மாவட்டப் பகுதிகளிலும், 1973-ம் வருடம் வழங்கப்பட்ட குடும்பக் கார்டுகள் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) 1973-ம் வருடத்தில் எத்தனை முறை குடும்பக் கார்டுகள் சோதனை செய்யப்பட்டது ?

(உ) கண்டுபிடிக்கப்பட்ட போலி கார்டுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : (அ) 1973ஆம் ஆண்டில் மதுரை நகரில் 31,897 குடும்பக் கார்டுகளும், மதுரை மாவட்டத்தின் இதர பகுதிகளில் 1,10,579 குடும்பக் கார்டுகளும் வழங்கப்பட்டன.

(இ) இடத்திற்கேற்ப ஒரு முறை முதற் கொண்டு ஆறு முறை வரை சோதனை செய்யப்பட்டது.

(உ) 16,165.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தப் போலி குடும்பக் கார்டுகள் எப்படி புழக்கத்திற்கு வந்தன ? யாராவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : எப்படியோ வந்தது என்று தெரிந்துதான் பிடித்திருக்கிறோம். பிடித்து மீண்டும் அவர்களுக்குக் கொடுக்காமல் செய்ய முடியுமே தவிர நடவடிக்கை எடுக்க முடியாது.

Kerosene seized at Aminjikarai.

*682 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that large quantities of kerosene and petrol were seized from a number of dealers in Aminjikarai area in Madras City around 20th August 1973 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : (அ) & (இ) சென்னை குற்றப்புலனாய்வுத் துறை உணவுப் பொருள் குற்றங்கள் குறித்து புலனாய்வு செய்வதற்கான பிரிவின் காவல்துறை இன்ஸ்பெக்டர், 1973ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 17ஆம் நாளன்று சென்னை நகரில் திடீர் சோதனை ஒன்று நடத்தி, தமிழ்நாடு மண்ணெண்ணெய்